ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

2437/04 - 2025 මැයි මස 19 වැනි සඳුදා - 2025.05.19

*2437/04 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டம்**

1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கம் கொண்ட சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் உப பிரிவு 4(1) மற்றும் 14 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகிய அனுர குமார திசாநாயக்க ஆகிய என்னால், பின்வரும் விதிமுறைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

**அனுர குமார திசாநாயக்க,**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார,
அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01.
2025, மே மாதம் 19.

## ஒழுங்குவிதிகள்

1. இவ் ஒழுங்குவிதிகள் **"2025 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்"** என அழைக்கப்படும்.

2. அவ்வப்போது திருத்தம் செய்யப்பட்ட, 2023, சனவரி மாதம் 01 ஆம் திகதிய 2312/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகள் இத்தால் மேலும் திருத்தம் செய்யப்படுகின்றன.

3. வணிக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அமைச்சர் முன்வைத்த 2025, மே 15 ஆம் திகதிய 25/0797/817/021 ஆம் இலக்க விஞ்ஞாபனம் தொடர்பான 2025, மே 15 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய இவ் ஒழுங்குவிதிகள் வெளியிடப்படுகின்றன.

4. 2023, சனவரி மாதம் 01 ஆம் திகதிய 2312/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், இவ் ஒழுங்குவிதிகளின் I ஆம் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள 2501.00 ஆம் இயைபு முறைக் குறியீட்டின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள அயடின் சேர்க்கப்படாத ஆரம்ப நிலை உப்பு மற்றும் உணவாகக் கொள்ள முடியுமான அயடின் சேர்க்கப்பட்ட உப்பு (தூளாக்கப்பட்ட மற்றும் உப்புக் கட்டி) இறக்குமதிக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத் தேவை, கப்பல் ஏற்றுமதிச் சீட்டில் /விமான ஏற்றுமதிச் சீட்டில் கப்பலேற்றிய /விமானமேற்றிய தினம் 2025, யூன் 10 அல்லது அதற்கு முந்தைய நாளுடைய அவ்வாறான உப்புத் தொகைக்கு இத்தால் நீக்கப்படும்.

   எவ்வாறாயினும், இவ் ஒழுங்குவிதிகளின் கீழ் 2501.00 ஆம் இயைபு முறைக் குறியீட்டின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள உணவாகக் கொள்ள முடியுமான அயடின் சேர்க்கப்பட்ட உப்பு (தூளாக்கப்பட்ட மற்றும் உப்புக் கட்டி) இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படுவது மேலே ஒழுங்குவிதி இலக்கம் 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சரவைத் தீர்மானத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சுகாதார அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இறக்குமதியாளர்களுக்கு மாத்திரமாகும்.

5. இவ் ஒழுங்குவிதிகளை மீறி இறக்குமதி செய்யப்படுகின்ற எந்தவொரு பொருளும், உரிய அனைத்து செலவுகளும் இறக்குமதி யாளர்களால் ஏற்கப்பட்டு மீள் ஏற்றுமதி செய்யப்பட வேண்டும்.

6. இந்த ஒழுங்குவிதிகளின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் சுங்கப் பணிப்பாளர் நாயகம், உரிமம் பெற்ற வங்கிகள் அல்லது வேறு உரிய தொடர்புடைய நிறுவனங்களுக்கு 'செயற்பாட்டு ஆலோசனைகள்' வழங்கப்பட வேண்டும்.

7. இவ் ஒழுங்குவிதிகள் தொடர்பாக எழும் எந்தவொரு பிரச்சினை தொடர்பாகவும், இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப் பாட்டாளர் நாயகத்தினால் சுங்கப் பணிப்பாளர் நாயகம் மற்றும் வணிக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளரிடம் வினவி இறுதித் தீர்மானத்தை வழங்க வேண்டும்.

8. இவ் ஒழுங்குவிதிகள் **2025, மே 19 ஆம் திகதி** முதல் அமுலுக்கு வரும்.

EOG 05 - 0172